# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

(Re-accredited with “A” Grade by NAAC)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.**

**தமிழ்நாடு, இந்தியா**

| | அலுவலகம் | : 0431- 2407016, 2407060 |
|---|---|---|
| | தொலைப்படி | : 0431 – 2407444 |
| **முனைவர். இரா. திருமுருகன் பி.ஹெச்.டி.** | மின் அஞ்சல் | : coe@bdu.ac.in |
| **தேர்வு நெறியாளர் (பொ)** | வலைத்தளம் | : www.bdu.ac.in |


**கடித எண்.முதுநிலை/எம்..பி.ஏ.& எம்.சி.ஏ./உடனடித் தேர்வு /ஏப்ரல் 2017 /நாள்: 24.07.2017**

**பெறுநர்**

**முதல்வர்,**
**(எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. பயிற்றுவிக்கப்படும் தன்னாட்சி அல்லாத கல்லூரிகள்)**
**(Non – Autonomous Colleges)**

**அய்யா / அம்மா,**

**பொருள்:** தேர்வுப்பிரிவு–முதுநிலை- எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ./ஏப்ரல் 2017- உடனடித் தேர்வு – தொடர்பாக.

-----

2015-2017 (எம்.பி.ஏ.) 2014-2017 (எம்.சி.ஏ.) கல்வியாண்டில் எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. பாடங்களில் சேர்க்கைப் பெற்று ஏப்ரல் 2017 இறுதியாணடில் தேர்வு எழுதி ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் தேர்ச்சி பெறாத மாணவ / மாணவியர்களுக்கு **உடனடித் தேர்வு** எழுத அனுமதி அளிக்கப்படுகின்றது.

**விபரங்கள்**

1. இறுதியாண்டு பயின்று ஏப்ரல் 2017- ல் தேர்வு எழுதியிருக்க வேண்டும்

1. 2015-2017 ஆம் ஆண்டில் எம்.பி.ஏ. சேர்க்கை பெற்று, இரண்டாண்டு பயின்ற மாணவ / மாணவிகள் மற்றும் 2014-2017 ஆம் ஆண்டில் எம்.சி.ஏ. சேர்க்கை பெற்று மூன்றாண்டு பயின்ற மாணவ / மாணவிகள் முதல் பருவத்தில் இருந்து இறுதிப் பருவம் வரையில் உள்ள பாடங்களில் மற்றும் M.C.A Lateral Entry-யில் பயின்ற மாணவ – மாணவியர்களுக்கு **ஏதேனும் ஒரு தாளில் மட்டும் நிலுவை இருந்தால்** உடனடித் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

2. உடனடித் தேர்வுக்கான விண்ணப்பம் மாணவ/மாணவிகள் பயின்ற கல்லூரியில் பெற்று பூர்த்தி செய்து கல்லூரி முதல்வர் வழியாக, இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

| | |
|---|---|
| **தேர்வுக் கட்டணம்** | : **ரூ.500/-** |
| **பூர்த்தி செய்யப்பட்ட உடனடித் தேர்வு விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்** | : **01-08-2017** |
| **உடனடித் தேர்வு நடைபெறும் நாள்** | : **06-08-2017 (Sunday)** |

**நேரம்: முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை**

**மேற்காணும் உடனடித் தேர்வு பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024 (பட்டமளிப்பு விழா) அரங்கில் நடைபெறும்.** உடனடித் தேர்வு விண்ணப்பத்துடன் பின்வருவன இணைக்கப்பட வேண்டும்.

1. “பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி” என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் எடுக்கப்பட்ட ரூ.500/--க்கான வங்கி வரைவோலை.
2. முதல்வர் சான்றுடன் கூடிய புகைப்படம் ஒட்டப்பட்ட அனுமதிச்சீட்டு (Hall ticket with attested photo). மற்றும் அடையாள அட்டை (Identy Card) கண்டிப்பாக எடுத்து வரவேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு வங்கி வரைவோலை மற்றும் அனுமதிச்சீட்டு இல்லாத விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது.

இத்தகவலை தொடர்புடைய மாணவ / மாணவிகளுக்குத் தெரிவித்து, உடனடித் தேர்வு விண்ணப்பங்களை இவ்வலுவலகத்திற்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாணவ/மாணவிகளுக்கு நுழைவுச்சீட்டு தேர்வு நடைபெறும் மையத்தில் **06-08-2017 அன்று காலை 9 மணி முதல்** வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

தேர்வு நெறியாளர் (பொ)